
moneysense

# உங்கள் ஓய்வுக்காலத்தை அணுகுதல்



# ஓய்வுக்காலம் என்றால் என்ன?

ஓய்வுக்காலம் என்பது வேலை பார்க்கலாமா வேண்டாமா என்பதை நீங்கள் முடிவு செய்யக்கூடிய நிலையில் இருப்பதைக் குறிக்கிறது. நீங்கள் முன்கூட்டியே ஓய்வுக்காலத்திற்கான திட்டமிடலைத் துவங்கினால், உங்களால் ஒரு சிறந்த முடிவை எடுக்க முடியும். ஓய்வு பெறலாமா என்பது குறித்து முடிவெடுப்பதற்கு இது சரியான நேரமா என்பதை அடையாளம் காண சில குறிப்புகள் தரப்பட்டுள்ளன - நீங்கள்:




**ஓய்வுக்காலத்திற்குத் திட்டமிடுவது என்றால் என்ன என்பதைத் தெரிந்துகொள்ள இதுவே சரியான நேரம். தொடர்ந்து படியுங்கள்!**

## உள்ளடக்கம்

## ஓய்வுக்காலத்திற்கு முன்

3
ஓய்வுக்காலத் திட்டம் ஒன்றை வகுத்திடுங்கள்

3
உங்களுடைய தற்போதைய நிலையை மதிப்பிடுங்கள்

5
தேவைக்கு ஏற்ற அளவு சேமித்திடுங்கள்

6
உங்கள் வாழ்க்கை மரபு குறித்துத் திட்டமிடுங்கள்

## ஓய்வுக்காலம்


11
உங்கள் ஓய்வுக்காலத் திட்டத்தைப் பரிசீலனை செய்திடுங்கள்

11
உங்கள் மத்திய சேமநிதியிலிருந்து பணம் எடுத்தல்

12
உங்கள் செலவுகளை நிர்வகித்து ஆரோக்கியமாக இருந்திடுங்கள்

13
மோசடிகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள்

QR குறியீடுகளைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டி:



# ஓய்வுக்காலத்திற்கு முன்



ஓய்வுக்காலத்திற்கு நீங்கள் எப்போது திட்டமிடத் துவங்க வேண்டும்? இதற்கான விடை மிக எளிமையானது; உங்களால் முடிந்தவரை கூடிய விரைவில்.

சரியாகச் சொல்லவேண்டும் என்றால், உங்களது முதல் சம்பளக் காசோலை உங்கள் கைக்கு வந்த தருணம் முதலே நீங்கள் ஓய்வுக்காலத்திற்குத் திட்டமிடத் துவங்க வேண்டும். நீங்கள் விரைவில் துவங்கினீர்களானால், நல்ல பழக்கவழக்கங்களைப் பின்பற்றவும், ஓய்வுக்காலத்திற்கு வேண்டிய சேமிப்புகளைப் பெருக்கவும் உங்களுக்கு நிறைய கால அவகாசம் இருக்கும். இப்போதும் தாமதமாகிவிடவில்லை. உங்கள் ஓய்வுக்காலத்திற்குத் திட்டமிடும்போது நீங்கள் பின்வரும் விஷயங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும்.



## 1 ஓய்வுக்காலத் திட்டம் ஒன்றை வகுத்திடுங்கள்



உங்கள் ஓய்வுக்கால இலக்குகளை வரையறுத்திடுங்கள் – எப்போது ஓய்வுபெறத் திட்டமிட்டுள்ளீர்கள்? உங்கள் ஓய்வுக்காலத்தில் வாழ விரும்பும் வாழ்க்கைமுறைக்கு உங்களுக்கு எவ்வளவு தேவைப்படும் என்று மதிப்பிட்டுள்ளீர்கள்? மசேநி திட்டமைப்புக் கருவியுடன் தொடங்குங்கள். இந்தக் கருவி உங்கள் மசேநி வழங்குதொகைகளைப் பரிசீலித்து, உங்கள் மசேநி சேமிப்புகளில் பெரும்பாலானவற்றை பயன்படுத்தி உங்கள் இலக்குகளை அடைவதற்கான ஆலோசனைகளை வழங்குகிறது.

மசேநி திட்டமைப்புக் கருவியைப் (ஓய்வுக்கால வருமானம்) பயன்படுத்த என்னை வருடுங்கள் .



## 2 உங்களுடைய தற்போதைய நிலையை மதிப்பிடுங்கள்

- நீங்கள் ஓய்வு பெறும்போது உங்களிடம் எவ்வளவு சேமிப்பு, மசேநி மற்றும் முதலீடுகள் இருக்கும் என்பதை மதிப்பாய்வு செய்து கணித்திடுங்கள்.

> நீங்கள் 1958-ல் அல்லது அதற்குப் பிறகு பிறந்திருந்தால், நீங்கள் வழங்குதொகைக்குத் தகுதிபெறும் வயதை சென்றடையும்போது, உங்கள் மசேநி ஓய்வுக்காலச் சேமிப்பில் குறைந்தது $60000 வைத்திருந்தால், நீங்கள் மத்திய சேமநிதி லைஃப் திட்டத்தில் இருப்பீர்கள்*. உங்களுக்கு எவ்வளவு வழங்குதொகை கிடைக்கும் என்பதை அறிய, நீங்கள் மசேநி திட்டமைப்புக் கருவி பயன்படுத்தலாம்.
>
> ***மசேநி லைஃப்** என்பது, உங்கள் ஆயுட்காலம் முழுவதும் உங்களுக்கு மாதாந்திர வழங்குதொகை வழங்கும் ஓய்வூதிய காப்புறுதி திட்டமாகும்.

- வீடு வாங்கும் எண்ணத்தில் இருக்கிறீர்களா அல்லது இன்னும் வீட்டுக் கடன் தவணையைச் செலுத்திக்கொண்டிருக்கிறீர்களா?

  - உங்களுக்கு வீடு வாங்கும் எண்ணம் இருந்தால், உங்களுக்குக் கட்டுப்படியாகக்கூடிய வீட்டை வாங்கி, உங்களது எதிர்கால ஓய்வுக்காலத் தேவைகளுக்கு அதிக சேமிப்பை ஒதுக்குவது பற்றி யோசித்துப் பாருங்கள்.
  - உங்கள் வீட்டுக் கடன் தவணையைச் செலுத்த நீங்கள் மசேநி சாதாரணக் கணக்கிலுள்ள சேமிப்பைப் பயன்படுத்தினாலோ, அல்லது அதைப் பயன்படுத்தத் திட்டமிட்டிருந்தாலோ, உங்களுக்கு வயதாகும்போது மசேநி-யின் நிர்ணயிக்கப்பட்ட விகிதங்களில் ஏற்படக்கூடிய மாற்றங்களைக் கருத்தில் கொள்ளுங்கள். ஏனெனில் உங்கள் வீட்டுக் கடனைச் செலுத்துவதற்கு நீங்கள் சாதாரணக் கணக்கிலிருந்து எவ்வளவு சேமிப்பைப் பயன்படுத்தலாம் என்பதை அது பாதிக்கும்.

அண்மை மசேநி நிர்ணயிக்கப்பட்ட விகிதங்கள் குறித்து மேலும் தெரிந்துகொள்ள என்னை ஸ்கேன் செய்யுங்கள்.




### கடன் இல்லாது ஓய்வுபெறுங்கள்

நீங்கள் ஓய்வுபெறுவதற்கு முன் வீட்டுக் கடனை முழுவதுமாகச் செலுத்திவிட வேண்டும் என்பதைக் குறிக்கோளாக வைத்திருங்கள். முடிந்த போதெல்லாம் முன்னதாகவே பணத்தைச் செலுத்தி, காலப்போக்கில் வட்டியை மிச்சப்படுத்துங்கள்.

- நீங்கள் வீட்டுக் கடன் தவணையைச் செலுத்திக்கொண்டிருந்தால், மூலதனத்தில் ஒரு பகுதியைத் திருப்பிக் கொடுப்பது (PCR) பற்றி யோசித்துப் பாருங்கள். இதன் மூலம் வீட்டுக் கடனுக்கான மொத்த வட்டியைக் குறைத்திட முடியும். வீவக வீட்டுக் கடனுக்கான மூலதனத்தில் ஒரு பகுதியைத் திருப்பிக் கொடுப்பதால், முன்கூட்டியே திருப்பிக் கொடுப்பதற்கான அபராதம் ஏதும் விதிக்கப்படாது.

மூலதனத்தில் ஒரு பகுதியைத் திருப்பிக் கொடுப்பது குறித்த கூடுதல் விவரங்களை நீங்கள் இங்கே தெரிந்துகொள்ளலாம்

**நீங்கள் ஒருவேளை வங்கி அடமானக் கடன் எடுத்திருந்தால், முன்கூட்டியே மூலதனத்தில் ஒரு பகுதியைத் திருப்பிக் கொடுப்பதற்குக் கட்டணம் ஏதும் செலுத்த வேண்டுமா என்பதையும், திருப்பிக் கொடுப்பதற்கான வழிமுறைகள் என்ன என்பதையும் வங்கியில் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்.**

உங்களது காப்புறுதித் திட்டங்களை மறுஆய்வு செய்யுங்கள் – உங்களுக்குத் திடீரென்று அல்லது நாட்பட்ட நோய் ஏற்பட்டால், விபத்து நேர்ந்தால் அல்லது உடற்குறை ஏற்பட்டால், அதற்காகும் சுகாதாரப் பராமரிப்புச் செலவுகளைச் செலுத்த உங்கள் காப்புறுதித் திட்டங்கள் போதுமானதாக இருக்குமா?

மேலும் தெரிந்துகொள்ள என்னை ஸ்கேன் செய்யுங்கள்.

உங்கள் காப்புறுதித் திட்டம் அளிக்கும் பாதுகாப்பைப் புரிந்துகொள்ளவும், அதை மறுஆய்வு செய்வதற்கும் போதிய நேரம் எடுத்துக்கொள்ளுங்கள். ஏனெனில், உங்களுக்கு வயது அதிகரிக்கும்போது உங்கள் காப்புறுதித் தேவைகளும் சந்தாக்களும் மாறக்கூடும். உங்கள் சேமிப்பிலிருந்து எடுத்துச் செலவிடத் தேவையிருக்குமா, அல்லது மருத்துவமனை அல்லது படுக்கைப்பிரிவு தேர்வில் வரம்புகள் இருக்குமா என்பதைத் தவறாமல் தெரிந்துகொள்ளுங்கள்.

உங்கள் ஆண்டு வருமானத்தில் 9 மடங்கு மரணம் மற்றும் மொத்த நிரந்தர ஊனமுற்றோர் பாதுகாப்பு மற்றும் உங்கள் ஆண்டு வருமானத்தில் 4 மடங்கு கடுமையான நோய் பாதுகாப்பு ஆகியவற்றைப் பெறுவதை கருத்தில் கொள்ளுங்கள். வீட்டிற்கு எடுத்துச் செல்லும் ஊதியத்தில் அதிகபட்சம் 15%* காப்பீட்டுப் பாதுகாப்பிற்காகச் செலவிடுங்கள்.

** தொகுக்கப்பட்ட தயாரிப்புகளை வாங்குவது (எ. கா. முழு ஆயுள் காப்புறுதி) முதலீடு மற்றும் பாதுகாப்பு கூறுகள் இரண்டும் கொண்டிருப்பதால், வீட்டிற்கு எடுத்துச் செல்லும் ஊதியத்தில் 15% விட அதிகமாக இருக்கலாம்.*

உங்கள் **மெடிஷீல்டு லைஃப், எல்டர்ஷீல்டு மற்றும், கேர்ஷீல்டு லைஃப்** (2020 முதல்) ஆகியவற்றின் காப்பீடுகளையும் மறக்காமல் கருத்தில் கொள்ளுங்கள்.

**மெடிஷீல்டு லைஃப்** என்பது சிங்கப்பூரர்கள் மற்றும் நிரந்தரவாசிகள் அனைவரையும், வயது அல்லது உடல்நிலை எதுவாக இருந்தாலும், அதிகப்படியான மருத்துவமனை கட்டணங்களிலிருந்து ஆயுள் முழுவதும் பாதுகாக்கும் அடிப்படை சுகாதாரக் காப்புறுதித் திட்டமாகும்.

**எல்டர்ஷீல்டு** என்பது கடுமையான இயலாமை ஏற்படும்போது மாதாந்திர வழங்குதொகை அளிக்கும் அடிப்படையான நீண்டகாலப் பராமரிப்பு காப்புறுதித் திட்டமாகும்.



**கேர்ஷீல்டு லைஃப்*** என்பது தேசிய அளவிலான நீண்டகாலப் பராமரிப்புக் காப்புறுதித் திட்டமாகும். இது கடுமையான இயலாமை ஏற்படும் சமயத்தில், அதிலும் குறிப்பாக முதுமை காலத்தில், நீண்டகாலப் பராமரிப்புச் செலவுகளுக்கு எதிராக சிங்கப்பூரர்களுக்கும், நிரந்தரவாசிகளுக்கும் அடிப்படைப் பாதுகாப்பு வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டது.

**நீங்கள் 1980 அல்லது அதற்குப் பிறகு பிறந்த சிங்கப்பூர் குடிமகனாகவோ அல்லது நிரந்தரவாசியாக இருந்தால், 1 அக்டோபர் 2020 அல்லது உங்களுக்கு 30 வயதை அடையும் போது, உங்களுக்கு முன்பே உள்ள சுகாதாரப் பிரச்சினைகள் ஏதேனும் இருந்தாலும் அல்லது கடுமையான இயலாமை நோய் ஏற்பட்டிருந்தாலும் தானாகவே காப்பீடு செய்யப்படும். நீங்கள் 1979 அல்லது அதற்கு முன் பிறந்த சிங்கப்பூர் குடிமகன் அல்லது நிரந்தரவாசியாக இருந்தால், கடுமையான இயலாமை இல்லாதவராக இருந்தால், நீங்கள் கேர்ஷீல்டு லைப்பில் சேரலாம் அல்லது மேம்படுத்தலாம். நீங்கள் 1970 மற்றும் 1979 க்கு இடையில் பிறந்த சிங்கப்பூர் குடிமகன் அல்லது நிரந்தரவாசியாக இருந்தால், நீங்கள் தற்போது எல்டர்ஷீல்ட் 400 திட்டத்தின் கீழ் உள்ளீர்கள் மற்றும் தானாக-செயல்படுத்தும் கட்டத்தில் கடுமையான இயலாமையை அடையவில்லை என்றால், நீங்கள் 1 டிசம்பர் 2021 முதல் கேர்ஷீல்ட் லைப்பில் தானாகவே பதிவு செய்யப்படுவீர்கள்.*

## 3 தேவைக்கு ஏற்ற அளவு சேமித்திடுங்கள்



உங்களுக்கு ஓய்வுக்காலத்தில் தேவைப்படக்கூடிய தொகைக்கும், ஓய்வுக்காலத்தின் போது உங்களிடமிருக்கக்கூடிய சேமிப்புக்கும் இடையே பற்றாக்குறை இருக்கிறதா? நீங்கள் பின்வரும் நடவடிக்கைகளைக் கருத்தில் கொள்ளலாம்:

**மசேநி நிரப்புத் தொகைகள்** மூலம் உங்கள் ஓய்வுக்காலச் சேமிப்புகளை அதிகரித்திடுங்கள். மாற்றாக, உங்கள் சாதாரணக் கணக்கிலிருக்கும் சேமிப்புகளை உங்கள் சிறப்புக் கணக்கிற்கு (55 வயதுக்குக் கீழ்) அல்லது ஓய்வுக்காலக் கணக்கிற்கு (55 வயது மற்றும் அதற்கும் மேல்), முறையே முழுத் தொகை அல்லது மேம்படுத்தப்பட்டத் தொகை வரை மாற்றிடலாம்

உங்கள் மசேநி சேமிப்புகளுக்கு ஓர் ஆண்டுக்கு 5% வரையிலும் (55 வயதுக்குக் கீழ்), மற்றும் ஓர் ஆண்டுக்கு 6% வரையிலும் (55 வயது மற்றும் அதற்கும் மேல்) கவர்ச்சிகரமான வட்டி விகிதம் கிடைக்கும். மேலும், தற்போதைய முழுத் தொகை வரை உங்கள் கணக்கில் நீங்கள் ரொக்கமாகப் பணம் நிரப்பும்போது, ஒரு வருடத்திற்கு $8,000 வரையிலான வரி நிவாரணத்தை நீங்கள் பெற்று மகிழலாம்.

மேலும் தெரிந்துகொள்ள என்னை ஸ்கேன் செய்யுங்கள்.

உங்கள் ஓய்வுக்கால இலக்குகளை எட்டுவதற்கான சரியான பாதையில் செல்கிறீர்களா என்பதைத் தெரிந்துகொள்ள உங்கள் நிதிகளை **மறுஆய்வு செய்யுங்கள்.**

உங்கள் ஓய்வுக்காலச் சேமிப்பை அதிகரிக்க, துணை ஓய்வூதியத் திட்டத்தைப் (SRS) பயன்படுத்துவதைக் கருத்தில் கொள்ளுங்கள். இத்திட்டம், தனிநபர்கள் தங்களது மசேநி சேமிப்புகளுக்கு மேலாக ஓய்வுக்காலத்திற்குக் கூடுதலாகச் சேமிக்க ஊக்குவிக்கும் ஒரு தன்னார்வத் திட்டமாகும். பணத்தைத் திரும்ப எடுப்பதற்கு முன் முதலீடுகளிலிருந்து கிடைக்கும் தொகைகளுக்கு வரி கிடையாது. ஓய்வூதியத் திட்டத்திலிருந்து திரும்ப எடுக்கும் 50% தொகைக்கு மட்டுமே ஓய்வுக்காலத்தில் வரிவிதிக்கப்படும்.

மேலும் தெரிந்துகொள்ள என்னை ஸ்கேன் செய்யுங்கள்.

- பொருத்தமானவற்றில் **முதலீடு** செய்திடுங்கள் – உங்கள் மாதாந்திர செலவின் 3 முதல் 6 மடங்கு தொகையை அவசரகாலச் சேமிப்பாக ஒதுக்குவதற்கு உங்கள் சம்பளத்திலிருந்து ஒரு பகுதியைத் தனியாக எடுத்து வைத்த பிறகு, வழக்கமான அடிப்படையில் முதலீடு செய்வது குறித்து யோசித்துப் பாருங்கள். அதிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து உங்களுக்கு அதிக பலன் கிடைக்கும். **வீட்டிற்கு எடுத்துச் செல்லும் ஊதியத்தில் குறைந்தது 10% முதலீடு செய்வதைக் கருத்தில் கொள்ளுங்கள்.**

நீண்டகாலம் சேமிப்பதற்கு ஒரு பாதுகாப்பான, நீக்குப்போக்கான வழி உங்களுக்குத் தேவைப்பட்டால், சிங்கப்பூர் சேமிப்புப் பத்திரங்களை (SSBs) வாங்குவதைக் கருத்தில் கொள்ளுங்கள். சிங்கப்பூர் சேமிப்புப் பத்திரங்கள் என்பது ஒரு வகையான அரசாங்கப் பாதுகாப்பு. சிங்கப்பூர் அரசாங்கம் இதற்கு முழு உத்தரவாதமளிக்கிறது. நீங்கள் முதலீடு செய்த தொகையை முழுவதுமாக, முதலுக்கு எவ்வித இழப்பும் இல்லாமல், திரும்பப் பெற முடியும்.

மேலும் தெரிந்துகொள்ள என்னை ஸ்கேன் செய்யுங்கள்.

- உங்கள் ஓய்வுக்கால வருமானத்தைப் பெருக்க, **உங்கள் வீவக வீட்டின் மதிப்பைப் பணமாக்குங்கள்.**

சற்றுக் கூடுதல் திட்டமிடலுடன், உங்கள் வீவக வீடு உங்களுக்கு ஒரு நிலையான வருமானத்தை ஈட்டித் தர முடியும். அதனைக் கொண்டு உங்கள் ஓய்வுக்காலத் தேவைகளை நீங்கள் பூர்த்தி செய்திட முடியும்.



மேலும் தெரிந்துகொள்ள என்னை ஸ்கேன் செய்யுங்கள்.

- குறைந்த வருமானம் பெறும் குடிமக்களுக்கும் குறைந்த வசதி கொண்டவர்களுக்கும் **ஆதரவு.**

குறைந்த வருமானமும் குறைவான செல்வமும் கொண்ட 1973 அல்லது அதற்கு முன்னர் பிறந்த தகுதிபெறும் சிங்கப்பூரர்கள், 2024 இறுதிக்குள் ஓய்வுக்காலச் சேமிப்பு போனஸ் $1,500 வரையும், மெடிசேவ் போனஸ் $1,500 வரையும் மாஜுலா தொகுப்புத்திட்டத்தில் இருந்து பெறலாம். கூடுதலாக, தகுதியான குறைந்த முதல் நடுத்தர வருமானம் கொண்ட சிங்கப்பூர் தொழிலாளர்கள் 2025 முதல் மாஜுலா தொகுப்புத்திட்டத்தில் இருந்து சம்பாதித்து சேமி போனஸில் கீழ் ஆண்டுதோறும் $1,000 வரை பெறலாம்.

செய்யுங்கள்.

தகுதிபெறும் மூத்தோரின் சுகாதாரப் பராமரிப்பு, ஓய்வுக்காலப் போதுமை ஆகியவற்றை மேலும் அதிகரிக்க, வேலைநலன், பொருந்தக்கூடிய ஓய்வுக்காலச் சேமிப்புத் திட்டம், மூத்தோர் ஆதரவுத் திட்டம் போன்ற தற்போதுள்ள ஆதரவு நடவடிக்கைகளும் 2025ஆம் ஆண்டிலிருந்து மேம்படுத்தப்படும்.



# 4 உங்கள் வாழ்க்கை மரபு குறித்துத் திட்டமிடுங்கள்



## நீண்டகால அதிகாரப் பத்திரம் ஒன்றைத் தயார் செய்திடுங்கள் (LPA)

- உங்கள் மனநல ஆற்றல் பாதிக்கப்பட்டு, உங்களுக்கான முடிவை உங்களால் சுயமாக எடுக்க முடியாத ஒரு சந்தர்ப்பத்தில், உங்கள் தனிப்பட்ட நலன் மற்றும் / அல்லது சொத்து மற்றும் நிதி சம்பந்தப்பட்ட விஷயங்களில் உங்கள் (டோனர்) சார்பில் முடிவெடுக்கவும் செயல்படவும், உங்கள் நம்பிக்கைக்குரிய குறைந்தபட்சம் ஒருவரை (டோனீ) நியமிப்பதற்கு நீண்டகால அதிகாரப் பத்திரம் வழிவகுத்துத் தருகிறது.
- ஒருவேளை உங்கள் மனநல ஆற்றல் பாதிக்கப்பட நேரிட்டால், நீங்கள் கவனித்துக் கொள்ளப்படுவீர்கள் என மன நிம்மதியைப் பெறுவதற்காக நீண்டகால அதிகாரப் பத்திரத்தை முன்கூட்டியே தயார் செய்வது மிகவும் முக்கியமான ஒன்றாகும். நீங்கள் நீண்டகால அதிகாரப் பத்திரத்தைப் பதிவு செய்யாத நிலையில், உங்கள் மனநல ஆற்றல் பாதிப்படைந்தால், உங்கள் குடும்ப உறுப்பினர்களால் உங்கள் சார்பில் செயல்பட முடியாது, குறிப்பாக நிதி சம்பந்தப்பட்ட விஷயங்களில். அவர்கள் குடும்ப நீதிமன்றத்தை அணுகி உங்கள் அதிகாரம் பெற்ற பிரதிநிதியாக நியமிக்கப்படுவதற்கு விண்ணப்பிக்க வேண்டும். அதற்கு நேரமும் பணமும் அதிகம் செலவாகும்.
- நீண்டகால அதிகாரப் பத்திரத்தைத் தயார் செய்வது மிகவும் சுலபமானது, கட்டுப்படியானது. நீண்டகால அதிகாரப் பத்திரத்தின் படிவம் 1-ஐ தயாரிக்கும் சிங்கப்பூரர்களுக்குத் தற்போது வழங்கப்படும் $75 கட்டணத் தள்ளுபடி 31 மார்ச் 2026 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

நீண்டகால அதிகாரப் பத்திரத்தைத் தயாரிப்பதற்கான அறிவுறுத்தல்களுக்கு என்னை ஸ்கேன் செய்யுங்கள்.

## முன் மருத்துவ உத்தரவு (AMD)

- ஒருவேளை உங்களுக்கு நோய் இறுதிக் கட்டத்தில் இருந்து, சுயநினைவை இழந்துவிடும் சூழ்நிலையில், உங்கள் உயிரை நீட்டிக்கும் சிகிச்சை அளிக்கப்படவேண்டாம் என்று நீங்கள் விரும்பினால், அந்த முடிவை உங்கள் மருத்துவரிடம் முன்கூட்டியே தெரிவித்து, உங்கள் குடும்ப உறுப்பினர்கள் அத்தகைய சிரமமான முடிவுகளை எடுக்கும் நெருக்குதலுக்கு ஆளாவதைக் குறைத்திடுங்கள்.

முன் மருத்துவ உத்தரவு தயாரிப்பது குறித்து மேலும் தெரிந்துகொள்ள ஸ்கேன் செய்யுங்கள்.

## முன்கூட்டியே பராமரிப்பைத் திட்டமிடல் (ACP)

நீங்கள் உங்களுக்காக சுயமாக முடிவெடுக்க முடியாத நிலையில் இருக்கும்போது, உங்களை எவ்வாறு கவனித்துக்கொள்ள வேண்டும் என்பதை உங்கள் குடும்பத்தாருக்கும் மருத்துவருக்கும் தெரிவிப்பதற்கு முன்கூட்டியே பராமரிப்பைத் திட்டமிடல் ஒரு வழியாகும். இத்தகைய முடிவுகளை நீங்கள் முன்கூட்டியே எடுப்பதற்கும், இந்த முடிவுகளுக்கான அடிப்படைகள் குறித்து கலந்தாலோசிக்கவும், உங்கள் ஆசைகளை எழுதி வைக்கவும், அவற்றை உங்கள் அன்புக்குரியவர்களிடம் தெரிவிக்கவும் இந்தத் திட்டமிடல் வழிவகுக்கிறது. இவற்றில் பின்வருவன அடங்கும்:

- சுவாசமளிப்பு மற்றும் உயிர்காப்பு
- அதிக ஆபத்துள்ள அறுவை சிகிச்சை
- நிரந்தரமாகக் குழாய் வழியாக உணவளித்தல்
- தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்தல்

**முன்கூட்டியே பராமரிப்பைத் திட்டமிடல் அனைவருக்குமானது. இதற்கு வயது வரம்போ சுகாதாரப் பிரச்சனையோ தேவையில்லை. மூன்று எளிய முறைகளில் இந்தத் திட்டமிடலைச் செய்திடலாம்:**


1. 

உங்கள் அன்புக்குரியவர்களுடன் உரையாடலைத் துவங்குவதற்கு, **go.gov.sg/plan-acp** என்ற இணையத்தளத்தில் கிடைக்கும் ACP மின் திட்டமிடல் கருவியைப் பயன்படுத்தவும்.

2. 

ஏதாவது ஒரு ACP மையத்தில் சான்றுபெற்ற ACP உதவியாளர் ஒருவரைச் சந்தித்து உங்கள் ஆசைகளை ஆவணப்படுத்த நேர முன்பதிவு செய்துகொள்ளுங்கள். *கட்டணங்கள் செலுத்த வேண்டியிருக்கலாம்.

ACP மையங்களின் பட்டியலை **go.gov.sg/plan-acpnodes** என்ற இணையத்தளத்தில் காணலாம்.

3. 

முன்கூட்டியே பராமரிப்பைத் திட்டமிடல் குறித்து உங்கள் சுகாதாரப் பராமரிப்பாளரிடம் கேளுங்கள்.



## உயில் தயாரித்திடுங்கள்

- உயில் என்பது, உங்கள் சொத்துகளை (மசேநி சேமிப்புகள் தவிர்த்து) எவ்வாறு பிரித்துக் கொடுக்க விரும்புகிறீர்கள் என்பதைக் கூறிடும். உயில் இருக்கும் பட்சத்தில், உங்கள் குடும்பத்தால் பணத்தையும் நேரத்தையும் மிச்சப்படுத்தவும், தகராறுகளைத் தவிர்த்திடவும் முடியும்.
- வழக்கறிஞரின் உதவி இல்லாமல் நீங்களாகவே சொந்தமாக உயில் ஒன்றைத் தயாரித்திடலாம். இருந்தாலும், உயில் சரியாக எழுதப்படவில்லையென்றால் அல்லது தெளிவற்று இருந்தால், அதை எதிர்த்து வழக்குத் தொடரலாம் அல்லது அதைச் செல்லாததாக்கிவிடலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும். உங்கள் உயில் செல்லுபடியாவதை உறுதிப்படுத்த, நீங்கள் ஒரு வழக்கறிஞரைச் சந்தித்து பேசலாம். உயிலில் எப்போது வேண்டுமானாலும் மாற்றங்கள் செய்திடலாம்.
- நீங்கள் உயில் எழுதாவிட்டால், உங்கள் சொத்துகள், சிங்கப்பூர் இறப்பாவணமின்மை சட்டத்திற்கிணங்க அல்லது இஸ்லாமிய சட்டத்திற்கிணங்க (நீங்கள் இஸ்லாமியராக இருந்தால்) பகிர்ந்தளிக்கப்படும்.

வழக்கறிஞரை / சட்ட நிறுவனத்தைத் தேட ஸ்கேன் செய்யுங்கள்

மேலும் தெரிந்துகொள்ள என்னை ஸ்கேன் செய்யுங்கள்.





## மசேநி வாரிசுதாரரை நியமனம் செய்யுங்கள்

- மசேநி வாரிசுதாரர் நியமனம், உங்கள் மசேநி சேமிப்புகள் எப்படி பகிர்ந்தளிக்கப்பட வேண்டும், ஒவ்வொரு வாரிசுதாரரும் எவ்வளவு பெற வேண்டும் என்பதை முடிவு செய்வதற்கான நீக்குப்போக்குத் தன்மையை உங்களுக்கு அளிக்கிறது. உங்களுடைய மசேநி சேமிப்புகள், நீங்கள் நியமித்த வாரிசுதாரர்களிடம் இயல்பாக ரொக்கமாக வழங்கப்படும்.
- நீங்கள் மசேநி நியமனத்தை இணையம்வழி அல்லது நேரில் மசேநி சேவை நிலையத்திற்கு சென்று செய்திடலாம்.
- நீங்கள் மசேநி வாரிசுதாரரை நியமிக்காவிட்டால், உங்கள் மசேநி சேமிப்புகள் பொதுச் சொத்துக்காவலர் அலுவலகத்தால் (PTO), சிங்கப்பூர் இறப்பாவணமின்மை சட்டத்திற்கிணங்க அல்லது இஸ்லாமிய சட்டத்திற்கிணங்க (நீங்கள் இஸ்லாமியராக இருந்தால்) பகிர்ந்தளிக்கப்படும். பொதுச் சொத்துக்காவலர் அலுவலகம் நிர்வாகக் கட்டணம் வசூலிக்கும். மசேநி வாரிசுதாரர் நியமனம் மூலம், வாரிசுதாரர்களால் மசேநி சேமிப்புகளை விரைவாகவும், வசதியாகவும் பெற முடியும்.

மசேநி நியமனத்தை எவ்வாறு செய்வது என்பதைத் தெரிந்துகொள்ள ஸ்கேன் செய்யுங்கள்.

மேலும் தெரிந்துகொள்ள என்னை ஸ்கேன் செய்யுங்கள்.



### வீவக வீட்டு உரிமையாளர் ஒருவர் இறந்துபோனால் அந்த வீடு என்னவாகும்?

வீட்டில் வசிக்கும் உங்கள் வாரிசுகளான வாழ்க்கைத்துணை அல்லது பிள்ளைகள், தகுதி நிபந்தனைகளுக்கு உட்பட்டு, அந்த வீட்டை வைத்துக்கொள்ளலாம். ஒருவேளை வீட்டை வைத்துக்கொள்ள யாரும் தகுதி பெறாவிட்டால், அந்த வீடு குறைந்தபட்சக் குடியிருப்புக் காலகட்டத்தைப் பூர்த்தி செய்திருந்தால் பொதுச் சந்தையில் விற்கப்படும்.


மேலும் தெரிந்துகொள்ள என்னை ஸ்கேன் செய்யுங்கள்.

# ஓய்வுக்காலம்




**ஓய்வுக்காலம் நெருங்கும்போது நீங்கள் எதையெல்லாம் சரிபார்க்க வேண்டும்? உங்கள் விருப்பத்தெரிவுகளை நீங்கள் தெரிந்து வைத்துக்கொள்வது, உங்கள் ஓய்வுக்காலப் பயணத்தைத் திட்டமிடுவதற்கு உதவியாக இருக்கும்.**





## 1 உங்கள் ஓய்வுக்காலத் திட்டத்தைப் பரிசீலனை செய்திடுங்கள்

- நீங்கள் ஓய்வுக்கால வயதை நெருங்கும்போது, நீங்கள் முழுமையாக ஓய்வுபெற அல்லது தொடர்ந்து வேலை செய்ய முடிவெடுக்கலாம். ஏதாவது ஒரு முடிவுக்கு வருவதற்கு முன்னர், உங்கள் ஓய்வுக்காலம் முழுவதுக்கும் பயன்படக்கூடிய ஓர் ஓய்வுக்காலத் திட்டம் உங்களிடம் இருப்பதை நீங்கள் உறுதி செய்திட வேண்டும். உங்கள் தேவைகளையும், விருப்பங்களையும் பரிசீலிப்பதற்குக் கொஞ்சம் நேரம் செலவிடுங்கள். உங்கள் இலக்குகளையும் பரிசீலனை செய்திடுங்கள்.

- ஓய்வுக்காலத்தின்போது பெரும்பாலும் வாழ்க்கைமுறையில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்படும். ஓய்வுக்கால வாழ்க்கைக்கு எவ்வாறு மாறிச்செல்ல விரும்புகிறீர்கள் என்பதை யோசித்துப் பாருங்கள். சிலர் முழுவதுமாக ஓய்வு பெறுவதற்குப் பதிலாக, வேலை செய்யும் நேரத்தைக் குறைத்து படிப்படியாக ஓய்வுக்காலத்திற்கு மாற விரும்புவார்கள். நீங்கள் குறைவான வேலைப் பளுவைப் பழகிக்கொள்ளவும், தன்னார்வங்களை அல்லது பொழுதுபோக்குகளை வளர்த்துக்கொள்ளவும் இது உங்களுக்கு நேரம் அளித்திடும். இதன்மூலம், முழுமையாக ஓய்வுபெறுவதற்குமுன் உங்கள் சேமிப்பையும் நீங்கள் பெருக்கலாம்.

> 1 ஜூலை 2022 முதல், மறு வேலை நியமன வயது 68 ஆக உயர்த்தப்பட்டது. இதனால், 62 வயது முதல் 68 வயது வரையிலான தகுதி பெறும் ஊழியர்கள் அதே நிறுவனத்தில் தொடர்ந்து வேலை தசய்வதற்கு தெலாளிகள் மறுவேலை வ ய்ப்பு பகாடுக்கவேண்டும். ெ
>
> 
> 
>
> நீங்கள் தகுதி பெறுகிறீர்களா என்பதை அறிய என்னை ஸ்கேன் செய்யுங்கள்.

- உங்கள் சேமிப்புகள், மசேநி சேமிப்புகள், முதலீடுகளிலிருந்து எடுக்கும் பணம் போன்றவற்றைப் பரிசீலனை செய்திடுங்கள். இதனைக்கொண்டு, உங்கள் ஓய்வுக்காலத் தேவைகள், அன்றாடச் செலவுகள் ஆகியவற்றைப் பூர்த்திசெய்வதற்கு உங்களிடம் எவ்வளவு ஓய்வுக்கால வருமானம் இருக்கிறது என்பதை உறுதிப்படுத்துங்கள்.

- ஒருவேளை உங்கள் ஓய்வுக்கால வருமானத்தைப் பெருக்கவேண்டிய அவசியம் இருந்தால், உங்கள் வீட்டின் மதிப்பைப் பணமாக்குவது பற்றி நீங்கள் யோசிக்கலாம்.

## 2 உங்கள் மத்திய சேமநிதியிலிருந்து பணம் எடுத்தல்

- 55 வயது முதல், உங்கள் சிறப்பு மற்றும் சாதாரணக் கணக்குகளிலிருக்கும் சேமிப்புகள், உங்களுக்குப் பொருந்தக்கூடிய முழுத் தொகை (FRS) வரை, உங்கள் ஓய்வுக்காலக் கணக்கிற்கு (RA) மாற்றப்படும். முழுத் தொகையை முழுவதும் ரொக்கமாக, அல்லது ஒரு சொத்து[1] மற்றும் அடிப்படைத் தொகையுடன் (BRS) ஒதுக்கி வைக்கலாம். உங்களது சாதாரண மற்றும் சிறப்புக் கணக்கிலிருந்து $5,000 வரையிலும், ஓய்வுக்காலக் கணக்கில் முழுத் தொகைக்கு அல்லது அடிப்படைத் தொகைக்கு[2] மேலாக உள்ள சேமிப்பையும் நீங்கள் எடுத்துக்கொள்ளலாம். 55 வயது பூர்த்தியான பிறகு, பணம் எடுப்பதற்கான நிபந்தனைகள் நிறைவேற்றப்படும் நிலையில், உங்கள் சேமிப்பை முழுவதுமாக அல்லது ஒரு பகுதியை எந்த நேரத்திலும் எடுத்துக்கொள்ளலாம். உங்களிடம் PayNow சேவை இருந்தால், நீங்கள் எடுக்கும் தொகை கிட்டத்தட்ட உடனடியாக உங்கள் வங்கிக் கணக்கிற்கு செலுத்தப்படும்.

[1] உங்கள் வீட்டின் எஞ்சியுள்ள குத்தகைக்காலம், 95 வயது வரை நீடிக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

[2] இதில் நிரப்புத்தொகைகள், ஈட்டிய வட்டிகள், கிடைக்கப்பெற்ற அரசாங்க மானியங்கள் உள்ளடங்காது.

- உங்கள் மசேநி கணக்கில் உள்ள சேமிப்புகளுக்கு 5% வரையிலும் (55 வயதுக்குக்கீழ்) 6% வரையிலும் (55 வயது மற்றும் அதற்கும்மேல்) வட்டி ஈட்டலாம். மசேநி கணக்குகளிலிருந்து நீங்கள் எடுக்கக்கூடிய சேமிப்புகளை, அவசரத் தேவைகளுக்கான நிதியாக அங்கேயே வைத்திருந்து, தேவை ஏற்படும்போது மட்டும் எடுத்துக்கொள்ளலாம். 2025 ஆம் ஆண்டு முதல், 55 வயது மற்றும் அதற்குமேற்பட்ட வயதுடைய மசேநி உறுப்பினர்கள், ஓய்வுக்காலத்தில் இன்னும் அதிக மாதாந்திர வழங்குதொகைகளைப் பெறுவதற்காக, பி.ஆர்.எஸ்.-ஐ விட 4 மடங்குவரை, தானாக முன்வந்து தங்கள் ஆர். ஏ.-க்கு அதிகமாக பணம் செலுத்தலாம்.

- வழங்குதொகை பெறத் தகுதிபெறும் வயதிலிருந்து (தற்போது 65 வயது) 70 வயது வரை எந்தநேரத்திலும் மாதாந்தர வழங்குதொகைகளைப் பெறத் தொடங்குவதற்கு நீங்கள் விண்ணப்பித்திடலாம். உங்கள் மசேநி வழங்குதொகைகளைத் தாமதமாகப் பெறத் தொடங்குவதன்வழி, மசேநி சேமிப்புக்குக் கூடுதல் வட்டி சேர்க்கலாம். இதன்வழி, உங்களது எதிர்கால ஓய்வுக்கால வருமானமும் பெருகும்.

  70 வயதுக்குள் நீங்கள் மாதாந்திர வழங்குதொகைகளை ஆரம்பிக்காவிட்டால், மசேநி கழகம் தானாகவே வழங்கத் தொடங்கிவிடும் (2017-க்குப் பிறகு 70 வயதாகவிருக்கும் உறுப்பினர்களுக்குப் பொருந்தும்).




நீங்கள் 55 அல்லது 65 வயதை எட்டுகிறீர்கள் என்றால், உங்களுக்குக் கிடைக்கும் தெரிவுகளை நன்கு புரிந்துகொள்ள மசேநி ஓய்வுக்காலத் திட்டச் சேவையில் (சிஆர்பிஎஸ்) கலந்துகொள்ள மசேநி வாரியத்தின் இணையத்தளம் மூலம் நீங்கள் நியமனம் செய்யலாம்.

## 3 உங்கள் செலவுகளை நிர்வகித்து ஆரோக்கியமாக இருந்திடுங்கள்

- நீங்கள் **மாதாந்திர வரவு செலவுத் திட்டம்** ஒன்றைத் தயாரித்து, உங்கள் செலவுகளைக் கண்காணித்திடுங்கள். அதன் மூலம் உங்கள் வருமானத்திற்குள் உங்களால் வாழ்ந்திட முடியும். அதிகமான செலவுகளைக் கவனத்தில் கொள்ளுங்கள். அவற்றை நீங்கள் குறைக்க முயற்சி செய்யலாம்.

  மேலும் தெரிந்துகொள்ள என்னை ஸ்கேன் செய்யுங்கள்.

  4D, டோட்டோ அல்லது சமூக சூதாட்டங்களில் நீங்கள் எப்போதாவது செய்யும் செலவுகளையும் குறித்து வைக்கலாம். ஏனெனில் இச்செலவு அதிகரித்துக்கொண்டே போகலாம். அதோடு, நீங்கள் இதனைப் பழக்கமாக்கிக் கொள்ளக்கூடிய ஆபத்தும் இருக்கிறது. சூதாட்டம் ஒரு பழக்கமாகிவிடுமோ என நீங்கள் கவலைப்பட்டால், உள்ளூர் சூதாட்டக்கூடங்கள், தனியார் மன்றங்களில் உள்ள ஜாக்பாட் இயந்திர அறைகள் ஆகியவற்றுக்குள் நுழைவதைத் தடை செய்யும் சுயவிலக்கு உத்தரவுக்கு விண்ணப்பிப்பது குறித்து நீங்கள் யோசிக்கலாம்.



உங்களுக்குத் தெரிந்த ஒருவர் சூதாட்டப் பழக்கத்திற்கு அடிமையாகிவிட்டதாகவும், அவருக்கு உதவி தேவைப்படுவதாகவும் நீங்கள் நினைத்தால், **சூதாட்டப் பிரச்சனைகளுக்கான தேசிய மன்றத்துடன் 1800-6-668-668** என்ற எண்ணில் தொடர்புகொள்ளலாம் அல்லது **www.ncpg.org.sg** என்ற இணையத்தளத்தை நாடலாம்.



- **ஆரோக்கியமாகவும், துடிப்பாகவும், சமூக ஈடுபாடுமிக்கவராகவும் இருங்கள்.** ஆரோக்கியமான, துடிப்பான வாழ்க்கைமுறையை நிலைநாட்டுவதோடு, சமூக நடவடிக்கைகளிலும் பங்கெடுங்கள். உடலுறுதியோடும் ஆரோக்கியத்தோடும் இருப்பதன்வழி, மருத்துவரிடம் அடிக்கடி செல்வதையும் தேவையற்ற மருத்துவச் செலவுகளையும் குறைத்திடலாம்.

  மேலும் தெரிந்துகொள்ள என்னை ஸ்கேன் செய்யுங்கள்.

  மேலும் தெரிந்துகொள்ள என்னை ஸ்கேன் செய்யுங்கள்.

  சுகாதார மேம்பாட்டு வாரியத்தின் வாழ்நாள் பரிசோதனை திட்டம், தகுதிபெறும் சிங்கப்பூரர்களுக்குக் குறைவான கட்டணத்தில் பரிசோதனை வழங்குகிறது. உங்கள் வயது மற்றும் பாலினத்தின் அடிப்படையில் நீங்கள் எந்த சுகாதாரப் பரிசோதனைக்குச் செல்ல வேண்டும் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.

  குறிப்பிட்ட சில தடுப்பூசிகளுக்கும் சுகாதாரப் பரிசோதனைகளுக்கும் மெடிசேவ் பயன்படுத்தி பணம் செலுத்தலாம்.

  மேலும் தெரிந்துகொள்ள என்னை ஸ்கேன் செய்யுங்கள்.

  மேலும் தெரிந்துகொள்ள என்னை ஸ்கேன் செய்யுங்கள்.

  உங்களுக்குக் கூடுதல் நேரம் இருந்தால், தொண்டூழியச் சேவை புரியலாம். தொண்டூழியம் மூலம் உங்கள் அனுபவத்தையும் அறிவையும் திறன்களையும் பகிர்ந்துகொண்டு இச்சமுதாயத்திற்கு உங்கள் பங்கைச் செய்திடலாம்.

## 4 மோசடிகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள்



- இணையத்தில் பொருட்கள் வாங்கும்போதும், வெளிநாட்டுக் கணக்குகளுக்குப் பணம் அனுப்பும்போதும் கவனமாக இருந்திடுங்கள்.

- உங்களது தனிப்பட்ட விவரங்களையும், உங்கள் வங்கிக் கணக்கு, கடன்பற்று/ரொக்கக்கழிவு அட்டை, அல்லது மின்னஞ்சல் கணக்கு குறித்த விவரங்களையும் பத்திரமாக வைத்துக்கொள்ளுங்கள். அவற்றை யாருடனும் பகிர்ந்துகொள்ளாதீர்கள்.

- உங்களுக்குத் தெரியாத யாருக்கும் பணம் அனுப்பாதீர்கள். அரசாங்க அமைப்பிலிருந்து அழைப்பதாகச் சொல்லிக்கொள்ளும் அழைப்புகள் வந்தால், பதட்டப்படாமல் **அழைப்பவரின் அடையாளத்தை நிதானமாக உறுதிசெய்துகொள்ளுங்கள்.** அந்த அமைப்பின் அதிகாரபூர்வ நேரடித் தொலைப்பேசி எண் அல்லது மின்னஞ்சல் முகவரி மூலம் தொடர்புகொள்ளுங்கள். அரசாங்க அமைப்புகள் ஒருபோதும் தொலைப்பேசி வழியாகப் பணம் கேட்கமாட்டா. உங்களுக்குச் சந்தேகமாக இருந்தால், தேசியக் குற்றத் தடுப்பு மன்றத்தின் மோசடிக்கு எதிரான நேரடித் தொலைப்பேசி சேவையை 1800-722-6688 என்ற எண்ணில் அழைத்து ஆலோசனை கேளுங்கள் அல்லது scamalert.sg என்ற இணையத்தளத்தை நாடுங்கள்.

நிதியறிவுக் கழகம் நடத்தும் இலவச உரைகள்/பட்டறைகள் ஆகியவற்றில் பங்கேற்று, உங்கள் அறிவாற்றலை மேம்படுத்திக் கொள்ளுங்கள்.

**ifl.org.sg என்ற இணையத்தளத்தில் மேலும் தெரிந்துகொள்ளலாம்**

## பயனுள்ள எண்கள்

| | | |
|---|---|---|
| மத்திய சேமநிதிக் கழகம் (CPF) | 1800 227 1188 | cpf.gov.sg |
| சுகாதார மேம்பாட்டு வாரியம் (HPB) | 1800 223 1313 | hpb.gov.sg |
| வீடமைப்பு வளர்ச்சிக் கழகம் (HDB) | 1800 866 3066 | hdb.gov.sg |
| நிதியறிவுக் கழகம் (IFL) | 6950 7538 | ifl.org.sg |
| சுகாதார அமைச்சு (MOH) | 6325 9220 | moh.gov.sg |
| தேசியக் குற்றத் தடுப்பு மன்றம் (NCPC) | 1800 722 6688 | scamalert.sg |
| பொதுச் சொத்துக்காவலர் அலுவலகம் (PTO) | 1800 225 5529 | pto.mlaw.gov.sg |

moneysense
money matters made simple

செப்டம்பர் 2024 அனைத்து விவரங்களும் சரியாக இருக்கின்றன.